[1971 டிசம்பர் 4

கூட்டுறவு ஒன்றியங்கள்

*87 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு மேற்பார்வை யூனியன்களைக் கலைத்துவிடுகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : ஆம்.

திரு. பி. எஸ். மணியன்: தலைவரவர்களே, இத்தகைய கூட்டுறவுத் துறைமூலம் விவசாயிகளுக்குச் செய்யக்கூடிய நல்ல காரியங்களைக் கிராமப் புறங்களில் விளம்பரம் செய்வதாகத் தெரிய வில்லை. அந்தக் குறையை நிவர்த்திக்கின்ற முறையிலே இந்தக் கூட்டுறவு யூனியன்கள் மூலம் பிரச்சாரம் செய்தல், விளம்பரம் செய்தல், சினிமாக் காட்டுதல், நாடகம் அமைத்தல் போன்ற பிரச்சார முறைகள் பின்பற்றப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இவற்றையெல்லாம் செய்ய, "தாலுக்கா யூனியன்கள்" என்று அடுத்த வினவிற்கு விடையாகச் சொல்லப்போகிறேன்.

2. நாடாளுமன்றக் கேள்விகள்—தொடர்ச்சி

(ஆ) துணை வினு கேட்க அனுமதி வழங்காதது குறித்து.

THIRU K. SUPPU : Sir, on a point of order.

Sir, Rule 38 of the Assembly Rules says as follows :—

'(1) Any member may put a supplementary question for the purpose of further elucidating any matter of fact regarding which an answer has been given to a starred question.

(2) The Speaker may disallow any supplementary question—

(a) if in his opinion, it infringes the rules regarding questions; or

(b) if a sufficient or reasonable number of supplementary questions have already been put in respect of the same question.'

In this case no supplementary question has been put. Sir, I want your ruling.

MR. SPEAKER : First of all, your point of order is not a point of order at all.

மாண்புமிகு திரு. சுப்பு அவர்கள் வழக்கறிஞர் என்று நான் கேள்விப்பட்டேன். அந்த விதிமுறைகளை எல்லோரும் படிதிருக் கிறார்கள். எந்த இடத்திலேயாவது சப்ளிமெண்டரி கேள்வி கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று இருந்தால் சாண்பிக் கட்டும். பேரவைத் தலைவரின் உசிதம்போல் சபையின் நடவடிக்கை சிறப்பாகவும், செழுமையாகவும் அமைய—உங்களுக்கு மட்டும் அல்ல நான் கூறுவது. பல கேள்விகளுக்குக்கூட—